1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது 1970-71-ல் மணலி, கள்ளக்குறிச்சி, ஜெயங்கொண்டசோழபுரம் இந்த 3 இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தகவல். வரைபடங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன, தயாரானதும் கட்டடங்கள் தொடங்கும். அதற்குரிய தொடராச் செலவு ரூ. 2,15,000, தொடரும் செலவு ரூ. 1,21,000 ஆகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

* 300 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18—12—1971 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த கலெக்டர்களுடைய மாநாட்டில், யுத்தம் நடந்த காரணத்தினுல், அந்த யுத்த காலத்திலே என்ன செய்வது, எந்தமாதிரி கமிட்டி அமைப்பது என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது அந்த மாவட்ட ரீதியான கமிட்டிகள் செயல்படுகின்றனவா, செயல்படவில்லையா? செயல்படுகிறது என்று சொன்னுல் எம்மாதிரி செயல்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது கமிட்டிகள் இருக்கின்றன, கலைக்கப்படவில்லை. ஆனுல் செயலற்றிருக்கின்றன.

சென்னை நகரிலுள்ள சாலைகள்

* 301 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எந்தெந்த சாலைகள் அண்மையில் அகலப்படுத்தப்பட்டன?

---

* 389–390-ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.